
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1304

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

75

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

# ‘பொன்னர் - சங்கர்’

## சுதந்திரமாக வாழ விரும்புகிறோம்!

‘பொன்னர் சங்கர்’ திரைப்படம் கலைஞர் எழுதிய ‘பொன்னர் சங்கர்’ என்ற வரலாற்று நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படம் என்றாலும், மேற்கு மாவட்டத்தில் நிலவும் ‘அண்ணமார் சாமி’ கதைப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளதாக, திரைப்படத்தில் தோன்றிப் பேசும் காட்சியில் குறிப்பிடுவார்.

### திரைப்படத்தின் கதை

பாளையக்காரர் பெரியமலைக்கொழுந்து (விஜயகுமார்) - பெருமாயி தம்பதியினரின் மகள் தாமரை நாச்சியாருக்கும் (குஷ்பு) செல்லாத்தா கவுண்டர் (கேப்டன் ராஜ்) மகன் மாந்தியப்பனுக்கும் (பிரகாஷ்ராஜ்) திருமண ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. அப்போது, தாமரை நாச்சியாரின் முறை மாப்பிள்ளையான மசச்சாமி என்ற நெல்லியன் கோடன் (ஜெயராம்) மாறு வேடத்தில் வந்து, தாமரை நாச்சியாரைத் தான் திருமணம் செய்யப்போவதாகக் கூறுகிறான்.

இதனைக் கேட்டு, பெரிய மலைக் கொழுந்தும் அவரது மகனும் தாமரை நாச்சியாரின் அண்ணனுமான சின்னமலைக் கொழுந்தும் (பொன்வண்ணன்) கோபம் கொண்டு கொதித்தெழுந்து, ‘குடியிருக்க வீடுகூட இல்லாத வெறும் பயலான நீயா மாப்பிள்ளை?’ என்று சொல்லி, நெல்லியனைத் தாக்குகின்றனர். ஆனால், தாமரை நாச்சியாரின் கண்ணீரைக் கண்டு மனமிறங்கும் பெரியமலைக் கொழுந்து, செல்லாத்தா கவுண்டரிடம் மன்னிப்பு கேட்பதுடன் தன் மகளை மசச்சாமிக்குத் திருமணம் செய்யப்போவதாகச் சொல்கிறார். இதனைக் கேட்டு, செல்லாத்தா கவுண்டரும் அவர் மகன் மாந்தியப்பனும் கோபம் கொள்கின்றனர். அப்போது, மற்றொரு பெரியபாளையக்காரனான காளி மன்னன் (நெப்போலியன்) வந்து இருவருக்கும் சமரசம் செய்துவைத்து, திருமணம் நடக்க ஆதரவளிக் கிறான்.

தாமரை நாச்சியாருக்கும் மசச்சாமிக்கும் திருமணம் நடக்கிறது. ஆனால், திருமணம் முடிந்தவுடன் இருவரையும் சின்னமலைக் கொழுந்து மாளிகையை விட்டுத் துரத்துகிறான். இருக்க ஒரு வீடும் இல்லாத நெல்லியன், சோழ மன்னனிடம் தானமாக நிலத்தைப் பெற்று, கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து கடுமையாக உழைத்து முன்னேறி, குன்றுடையார் என்று புகழப்படும் பெரிய நிலையை அடைகின்றனர்.

இந்நிலையில், தாமரை நாச்சியாருக்கு இரட்டை ஆண்குழந்தை பிறக்கிறது. அக்குழந்தைகளைக் கொலை செய்ய மாந்தியப்பன் சதி செய்வதை அறியும் ராக்கியண்ணன் (ராஜ்கிரண்) தாமரை நாச்சியாரின் குழந்தைகளை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் தன் குழந்தைகளைக் கிடத்துகிறான். அக்குழந்தைகள் கொலை செய்யப்படுகின்றன. அந்த வேதனையில் ராக்கியண்ணனின் மனைவி (சீதா) உயிரை விடுகிறாள்.


ராக்கியண்ணன், தாமரை நாச்சியாரின் குழந்தைகளை ரகசியமாக வளர்த்து, போர்ப்பயிற்சி அளித்து, ஆளாக்குகிறான். அவர்களே பொன்னர் - சங்கர். மேலும், தன் குழந்தைகளைக் கொன்றவர்களைப் பழிதீர்க்கும் வரை பொன்னர் - சங்கர் ஆகிய இருவரும் பிரமச்சாரிகளாக வாழ

இந்நிலையில், மாந்தியப்பனின் தூண்டுதலால் காளி மன்னன் தலைமையில் செல்லாத்தா கவுண்டர், பெரியமலைக்கொழுந்து ஆகியோர் படையெடுத்து சின்னமலைக் கொழுந்துவின் அரண்மனையைத் தாக்க வருகின்றனர்.

சின்னமலைக்கொழுந்து, அவர் மகன் வையம்பெருமாள் (ரியாஸ்கான்) பொன்னர் - சங்கர், ராக்கியண்ணன், மாயவர் ஆகியோர் தலைமையில் படை நடத்தி, எதிரியுடன் மோதுகின்றனர். கடுமையாக நடைபெறும் யுத்தத்தில், பெரியமலைக்கொழுந்து, செல்லாத்தா கவுண்டர், ராக்கியண்ணன், வையம்பெருமாள்... இருவரும் கொல்லப்படு



படங்கள் உதவி : ஞானம்



வேண்டும் என்று நிபந்தனையும் விதிக்கிறான். அதனை பொன்னர் - சங்கர் ஏற்கின்றனர்.

சின்னமலைக்கொழுந்து சிலம்பாயி (லட்சுமி ராமகிருஷ்ணன்) தம்பதியரின் மகள்களான முத்தாயி (திவ்யா பரமேஸ்வரன்), பவளாயி (பூஜா சோப்ரா) ஆகியோரை ஓர் ஆபத்திலிருந்து பொன்னர் - சங்கர் காப்பாற்றுவதால், சின்னமலைக்கொழுந்துவின் நன்மதிப்பைப் பெறுகின்றனர். தன் மகள்கள் விருப்பம் அறிந்து, அவர்களைத் திருமணம் செய்துகொள்ளும்படி சின்னமலைக்கொழுந்து பொன்னர் - சங்கரிடம் கேட்கிறான்.

அப்போது அங்கு வரும் மாயவர் (நாசர்), பொன்னர் - சங்கர் இருவரும் உன் தங்கை தாமரை நாச்சியாரின் மகன்கள் என்கிற உண்மையைச் சொல்லி, இரண்டு குடும்பங்களையும் சேர்த்துவைக்கிறார்.

அது நாள் வரை தங்களது குழந்தைகள் இறந்துவிட்டதாகக் கருதிக்கொண்டிருந்த தாமரை நாச்சியாரும் குன்றுடையாரும் தம் மகன்களைக் கண்டு மகிழ்வதுடன், தம் மகன்ளைக் காப்பாற்றி, வளர்த்து ஆளாக்கிய ராக்கியண்ணனுக்கு நன்றியும் சொல்கின்றனர்.



> “தமது மாநில சுயாட்சிக் கொள்கையை பொன்னர் - சங்கரின் வாய்மொழியாகக் கலைஞர் வெளிப்படுத்துகிறார் என்றே தோன்றுகிறது.”

கின்றனர். இறுதியில், மாந்தியப்பனை பொன்னர் - சங்கர் பழிதீர்க்கின்றனர். காளி மன்னனை மட்டும் கொல்லாமல் விட்டுச் செல்கின்றனர். அவமானத்தால் காளிமன்னன் போர்க்களத்திலேயே தற்கொலை செய்து கொள்கிறான்.

சோழ மன்னன் (பிரபு) பொன்னர் - சங்கரின் கோரிக்கையை ஏற்று, அவர்களது சிற்றரசுக்கு கப்பம் கட்டுவதில் இருந்து விலக்களித்து, சுதந்திர சிற்றரசாக அறிவிப்பதுடன், பொன்னர் - சங்கரை அவர்களது மாமன் மகள்களுடன் இணைத்துவைக்கிறார். அத்துடன் படம் நிறைவடைகிறது.

இதுவே ‘பொன்னர் - சங்கர்’ திரைப்படத்தின் கதை.

படத்தின் இறுதியில், சோழ மன்னன் வருவது நாம் எதிர்பார்க்காத காட்சியாக உள்ளது. அத்துடன் பேரரசுக்குக் கப்பம் கட்டி, அடிமையாக வாழ்வது அவமானம் என்று பொன்னரும் - சங்கரும் சோழ மன்னனிடம் சொல்வதுடன், தாங்கள் சுதந்திரமாக வாழ விரும்புவதாகவும் சொல்கின்றனர். ‘ஒருவேளை கப்பம் கட்டவேண்டிய நிலை வந்தால், சோழர்களையும் எதிர்த்துப் போராடுவோம் என்றும் கூறுகின்றனர்’.

இது ‘அண்ணமார் சாமி’ கதைப் பாடலில் இருக்கிறதோ இல்லையோ நமக்குத் தெரியாது. ஆனால், தமது மாநில சுயாட்சிக் கொள்கையை பொன்னர் - சங்கரின் வாய்மொழியாகக் கலைஞர் வெளிப்படுத்துகிறார் என்றே தோன்றுகிறது. அதாவது, கலைஞர் தனது இலட்சியத்தை முத்தாய்ப்பாகச் சொல்வதுடன் படம் நிறைவடைகிறது.

...காட்சி விரியும்

## சிறுபான்மையினருக்கு அனைவரும் தோள்கொடுக்க வேண்டும்!

சட்டப்பேரவை விவாதங்களைத் தொடர்ந்து கவனித்து, பதிவிட்டுவரும் ஊடகர் யாசிர், சிறுபான்மையினர் நலத்துறை தொடர்பான விவாதம் குறித்து எழுதி உள்ள கருத்து, பலராலும் பகிரப்பட்டுவருகிறது.

“சட்டப்பேரவையில், தமீமுன் அன்சாரி மிகத் தெளிவாகச் சொன்னார். தி.மு.க. அ.தி.மு.க. த.வெ.க. யார் செய்தாலும் இந்தச் சமூகம் வரவேற்கும். ‘இவர்கள்தான் செய்தார்கள், இவர்கள் செய்யவே இல்லை என்று சொல்வது, நன்றி இல்லாத எண்ணத்தை உருவாக்கும்’ என்று அழகாகச் சொன்னார். அவர் சொன்னது முஸ்லிம் சமூகத்தைத்தானே தவிர, முஸ்லிம் லீக்கை அல்ல.

உடனே, முஸ்லிம் லீக் அமைச்சர், ‘5 வருடங்களுக்கு ஒருமுறை கூட்டணி மாறுபவருக்கு பேசத் தகுதி இல்லை’ என்கிறார். இது ஆணவப் பேச்சு. ஒரு சிலரைப் போல ஒரு முஸ்லிமின் தகுதி பற்றி எல்லாம் பேசவே கூடாது; அது மார்க்கத்திலும் அனுமதி இல்லை.

தமீமுன் அன்சாரி எந்தக் கூட்டணியில் இருக்கிறாரோ, அந்தக் கூட்டணிக்கு ஆதரவாகவே செயல்பட்டுள்ளார். முஸ்லிம் லீக்கைப் போல சோஃபா வாங்கிகொண்டு, நன்றி மறந்து, கொல்லைப்புற வழியாக ஓடியதில்லை. முஸ்லிம் லீக் அமைச்சரைப் போல வெற்றிபெற வைத்தவர்களுடன் நன்றி சொல்லப் போகாமல், எதிர்த்தவர்களை அழைத்துக்கொண்டு நன்றி சொல்லப் போகவில்லை.

அடிமையாக மாறும் தனத்தை முஸ்லிம் லீக் விட வேண்டும். ஒரு சிறுபான்மைச் சமூகமாக நாம் இருக்கும்போது, எல்லோரையும் அரவணைத்துத்தான் செல்ல வேண்டும். முஸ்லிம் லீக்குக்கு, விஜய் கடவுளின் கடவுளாக இருக்கலாம். முஸ்லிம்களுக்கு அல்லாஹ்தான் கடவுள்.

சிறுபான்மைத் துறை அமைச்சர் என்ற பதவியில் ஆணவத்தில் ஆடுபவர், அந்தத் துறையையும் பதவியையும் உருவாக்கியதே தி.மு.க.தான் என்பதை மறக்கக் கூடாது” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### கழகத் தேர்தல் நிதி!



க.நாச்சிமுத்து

1995-ஆம் ஆண்டு, கரூரில் பொதுக்கூட்டம் நடத்தி, கழகத் தேர்தல் நிதியாகப் பெருந்தொகை வழங்கும் நிகழ்ச்சியை நடத்தினோம். அன்றையப் பொருளாளர் ஆற்காட்டார் வருகைதந்தார். படத்தில் முன்னாள் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வாசுகி முருகேசன் மற்றும் முன்னாள் நகர மன்றத் தலைவர் கே.வி. ராமசாமி, முன்னாள் மாவட்டச் செயலாளர் பரமத்தி சண்முகம் ஆகியோர் உடன் உள்ளனர்.

**- க.நாச்சிமுத்து, முன்னாள் கரூர் ஒன்றியப் பெருந்தலைவர், புகளூர் தமிழ்ச்சங்கத் தலைவர், வேலாயுதம்பாளையம், கரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கழகம் வரலாறு — ம லு ரு க

### மூன்று இலட்சம் கரங்கள்!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில், 45 இடங்களில் கழகம் வெற்றிபெற்றதற்காக, 15-1-1959 அன்று கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா பேசினார். “சென்னை மாநகராட்சி மன்ற நிர்வாகப் பொறுப்பை தி.மு.கழகம் ஏற்கத்தான் வேண்டுமா? வேண்டும் என்று விரும்புபவர்கள் மட்டும் ‘ஆம்’ என்று கூறிக் கரம் உயர்த்துங்கள்!”என்று அண்ணா கூடி நின்ற மக்களைப் பார்த்துக் கேட்டார். கூடியிருந்த மூன்று இலட்சம் பேர்களுடைய அகமும் முகமும் மலர்ந்து, ‘ஆம்’ என்ற குரல் விண்ணை முட்டியது; அத்தனை கரங்களும் மேலே உயர்ந்தன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900